6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) சிறைக் கைதிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தல்.

1994 ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1994). மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1994 @) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாராவது பேச வேண்டுமா? இல்லை.

பிற்பகல் 1.10

மாண்புமிகு சட்ட அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க . . (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க . . (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

@ 3-1-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க . . (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க . . (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க . . (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க . . (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டாவது சட்டமுன்வடிவு.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை